**ஜனவரி – 07**

# TNPSC துளிகள்

- ஏர்டெல் பணவழங்கீட்டு வங்கியானது, 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 2வது அட்டவணையின் கீழ் ஒரு பட்டியலிடப்பட்ட வங்கியாக இந்திய ரிசர்வ் வங்கியினால் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
    - இதன் மூலம், இந்த வங்கியானது, அரசாங்கத்திற்குச் சில சேவைகளை வழங்கிட முடியும்.
- ஒடிசாவின் கஞ்சம் மாவட்டமானது, அம்மாநிலத்தில் குழந்தைத் திருமணம் இல்லாத முதல் மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
    - கஞ்சம் மாவட்டமானது, இந்தச் சாதனையை எட்டுவதற்காக வேண்டி நிர்பயா கதி (அச்சமற்ற அரும்புகள்) எனும் திட்டத்தைத் தொடங்கியது.
- ஆப்பிள் நிறுவனத்தின் பங்குச் சந்தை மதிப்பு 3 டிரில்லியன் டாலர்களாகும்.
    - இந்த மதிப்பை எட்டிய உலகின் முதல் நிறுவனமாக இது மாறியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## கணித அறிவியல் கல்வி நிறுவனம்

- சென்னையிலுள்ள கணித அறிவியல் கல்வி நிறுவனமானது இந்த ஆண்டு ஜனவரி 03 அன்று தனது 60வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.
- இந்தக் கல்வி நிறுவனமானது சென்னையில் அமைந்துள்ள ஓர் ஆராய்ச்சி மையம் ஆகும்.
- இதற்கு அணுசக்தித் துறையினால் நிதியளிக்கப்படுகிறது.

- இந்த நிறுவனமானது கப்ரு மீத்திறன் கணினியை இயக்குகிறது.

## கழிநண்டு ரியோவைரஸ்

- காட்டு நண்டுகள் (சியிலா செராட்டா) பெருமளவில் உயிரிழப்பதற்கு கழிநண்டு ரியோ வைரஸ் தான் காரணம் என்று ஆந்திரப் பிரதேசம் சமீபத்தில் கண்டறிந்தது.
- நாகயலங்கா பகுதி வயல்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் இந்த வைரஸ் இருந்தது குறித்த ஒரு தகவல் மேல்நிலை கடல் அறிவியல் ஆய்வு மையம் (அண்ணா மலைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு) மற்றும் M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை ஆகியவை இணைந்து மேற்கொண்ட கூட்டு ஆராய்ச்சியில் உறுதிப் படுத்தப் பட்டது.
- M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையானது, கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள மசூலிப்பட்டினம் மற்றும் நாகயலங்கா போன்ற பகுதிகளில் நண்டுகளின் இறப்புப் பதிவினைக் கண்காணித்து வருகிறது.

## 5G இணையக் கட்டமைப்பு 2022




- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் 5G இணையக் கட்டமைப்பு அறிமுகப் படுத்தப்படும் எனத் தொலைத்தொடர்பு துறை உறுதி அளித்தது.
- ஆரம்பத்தில் நாட்டிலுள்ள 13 நகரங்கள் 5G சேவையைப் பெறும் என அந்தத் துறை குறிப்பிட்டது.
- அவையாவன: அகமதாபாத், பெங்களூரு, சண்டிகர், சென்னை, டெல்லி, காந்திநகர், குருகிராம், ஹைதராபாத், ஜாம்நகர், கொல்கத்தா, லக்னோ, மும்பை மற்றும் புனே ஆகியனவாகும்.
- கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கூறிய நகரங்கள் சிலவற்றில் ஏர்டெல், ஜியோ மற்றும் விஜ போன்ற தொலைத் தொடர்பு சேவை நிறுவனங்கள் 5G சேவையின் ஒரு சோதனை ஓட்டத்தை மேற்கொண்டன.
- தரவுப் பதிவிறக்க வீதங்களின் அடிப்படையில் 5G தொழில்நுட்பம் மேம்பட்ட பயனர் அனுபவத்தினை வழங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## OMISURE


- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது 'OMISURE' என்ற ஒரு கருவிக்குச் சமீபத்தில் தனது ஒப்புதலை வழங்கியது.
- OMISURE என்பது ஒரு RT-PCR கருவி ஆகும்.

- இது ஓமைக்ரான் எனும் கோவிட்-19 வைரஸ் திரிபினைக் கண்டறிய பயன்படுகிறது.
- தெர்மோ ஃபிசர் எனும் ஒரு அமெரிக்க நிறுவனம் இந்தக் கருவியினை வடிவமைத்து உருவாக்கியது.
- இது டாடா நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது.
- இந்தக் கருவியானது ஓமைக்ரானைக் கண்டறிய S மரபணு இலக்கு நொடிப்பு என்ற முறையை (S Gene Target Failure) பயன்படுத்துகிறது.
- ஓமைக்ரானைக் கண்டறிவதற்கு இந்தியாவில் இந்த முறையைப் பயன்படுத்தும் ஒரே கருவி இதுவாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## உள்நாட்டு முறைசார்பு முக்கிய வங்கிகள்




- இந்திய ரிசர்வ் வங்கியானது பாரத் ஸ்டேட் வங்கி, ICICI வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவற்றை உள்நாட்டு முறைசார்பு முக்கிய வங்கிகளாக தக்க வைத்துள்ளது.
- இந்த 3 வங்கிகளும், 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 04 முதல் இந்திய ரிசர்வ் வங்கி மூலம் வெளியிடப்பட்டு வரும் உள்நாட்டு முறைசார்பு முக்கிய வங்கிகள் என்ற பட்டியலில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.
- உள்நாட்டு முறைசார்பு முக்கிய வங்கிகள் என்பவை, ஒருவேளை தோல்வியடைந்தால் (வீழ்ச்சியடைந்தால்) அந்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது ஒரு குறிப்பிடத் தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான வங்கிகள் ஆகும்.
- இவை 5 வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- அவை வகை 1, வகை 2, வகை 3, வகை 4 மற்றும் வகை 5 என்பவையாகும்.

- வகை 5 ஆனது மிக முக்கியமான வங்கியாக இருப்பதோடு பிற வங்கிகள் அதனைத் தொடர்ந்து இறங்கு வரிசையில் உள்ள வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.
- இதில் பாரத் ஸ்டேட் வங்கி வகை மூன்றில் உள்ளது.
- ICICI வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவை வகை ஒன்றில் இடம் பெற்றுள்ளன.


### சர்வதேசப் பண வழங்கீட்டு வணிகம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது பணப்பரிமாற்றச் சேவை என்ற ஒரு திட்டத்தின் கீழ் சர்வதேசப் பண வழங்கீட்டு (நாடுகளுக்கிடையே) வணிகச் சேவையைத் தொடங்கச் செய்வதற்கு வேண்டி ஃபினோ பணவழங்கீட்டு வங்கிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்புதலானது, ஃபினோ பண வழங்கீட்டு வங்கியின் வாடிக்கையாளர்கள், வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் தொகையைப் பெற இயலும்.
- மேலும், இது தனது நாடுகளுக்கிடைப்பட்ட பண வழங்கீட்டினை மேம்படுத்துவதற்காக வேண்டி மேலும் சில முன்னணிப் பணப் பரிமாற்ற நிறுவனங்களுடன் கூட்டிணையவும் திட்டமிட்டுள்ளது.

## மாநிலச் செய்திகள்

### லோசர் திருவிழா

- லடாக்கில் நடைபெறும் லோசர் திருவிழாவானது திபெத்தியப் புத்த மதத்தின் ஒரு பாரம்பரிய அட்டவணையின் படி இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் கொண்டாடப் பட்டது.
- இது லடாக் பகுதியிலுள்ள புத்தச் சமுதாயத்தினரால் கொண்டாடப்படுகிறது.
- லோசர் என்பது திபெத்திய நாட்காட்டியிலுள்ள 11 மாதங்களின் முதல் நாளினுடைய தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் திபெத்திய சந்திர நாட்காட்டியின் முதல் நாள் தொடங்கி 15 நாட்கள் நடைபெறும் ஒரு திருவிழாவாகும்.
- லோசர் என்பது புத்தாண்டு எனப் பொருள்படும் ஒரு திபெத்திய சொல் ஆகும்.
- ஜே சோங்கபா என்பவருடைய (Je Tsongkhapa) பிறந்த நாள் மற்றும் அவர் முக்தி (நிர்வாணம்) அடைந்த தினம் ஆகியவற்றைக் கொண்டாடுவதோடு இந்த விழாவானது தொடங்கியது.




## LNG முனையம்

- கர்நாடகா அரசானது சிங்கப்பூரைச் சேர்ந்த LNG அலையன்ஸ் என்ற நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இது மங்களூருவில், அந்த மாநிலத்தின் முதல் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு முனையத்தினை அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- இந்த முதல் LNG முனையமானது நியூ மங்களூர் துறைமுக நிறுவனத்துடன் இணைந்து கர்நாடகாவில் நிறுவப்பட உள்ளது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகர சுழிய அளவில் கார்பன் உமிழ்வை அடைவதற்கு வேண்டி, எரிபொருள் சந்தைக்கு ஒரு மாற்றினை வழங்குவதற்கான மத்திய அரசினுடைய திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த முனையம் நிறுவப்பட உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இராபர்ட் இர்வின்



- ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இராபர்ட் இர்வின் என்பவருக்கு லண்டனின் தேசிய வரலாற்று அருங்காட்சியகத்தின் ஆண்டின் சிறந்த புகைப்படக் கலைஞருக்கான பீப்பிள்ஸ் சாய்ஸ் என்ற விருதானது (2020) வழங்கப் பட்டுள்ளது.
- வடக்கு ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயினை ஆளில்லா விமானம் மூலம் அவர் எடுத்த புகைப்படத்திற்காக வேண்டி அவருக்கு இந்த விருதானது வழங்கப் பட்டது.

- 17 வயதான இவர் ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற வனவிலங்கு ஆர்வலர் ஸ்டீவ் இர்வினுடைய (மறைந்த) மகன் ஆவார்.

## கேப்டன் ஹர்ப்ரீத் சாண்டி

- தென்துருவத்திற்குத் தனியாக ஒரு பயணம் மேற்கொண்டு நிறைவு செய்த முதல் பெண்மணியாகி கேப்டன் ஹர்ப்ரீத் சாண்டி வரலாறு படைத்துள்ளார்.
- இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டிஷ் சீக்கிய இராணுவ அதிகாரியும் ஒரு முடநீக்க மருத்துவரும் ஆவார்.
- இவர் போலார் ப்ரீத் எனவும் அழைக்கப்படுகிறார்.



## அல்கா மிட்டல்





- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குநர் அல்கா மிட்டலுக்கு, அந்தக் கழகத்தின் புதிய இடைக்கால தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் எனும் கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்த மகாரத்னா நிறுவனத்தின் உயரிய பதவியை வகிக்கும் முதல் பெண் இவர் ஆவார்.

- சுபாஷ் குமாரை என்பவரையடுத்து இவர் இந்தப் பொறுப்பினை ஏற்கிறார்.

## ரிச்சர்டு லீக்கி

- உலகப் புகழ்பெற்ற கென்ய அரசியல்வாதி, இயற்கைப் பாதுகாப்பாளர் மற்றும் புதை படிவச் சேகரிப்பாளரான ரிச்சர்ட் லீக்கி காலமானார்.
- ஆப்பிரிக்காவில் தான் மனிதகுலம் உருவானது என்பதை நிரூபிக்கும் பல அற்புதமான கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்த 1984 ஆம் ஆண்டின் 'துர்கானா பாய்' என்ற கண்டுபிடிப்பின் புகழ் இவரையேச் சாரும்.
- 'துர்கானா பாய்' என்பது இதுவரையில் கண்டெடுக்கப்பட்ட மனித மூதாதையர்களின் எலும்புகளில் மிகவும் முழுமையாகக் கிடைக்கப் பெற்ற ஒரு புதைபடிம எலும்புக் கூடாகும்.
- மேலும் ஆப்பிரிக்க யானைகளின் எண்ணிக்கையைக் காப்பாற்றுவதற்காக, தந்த வர்த்தகங்களுக்கு எதிரான பல பிரச்சாரங்களை முன்னெடுத்து நடத்தியதற்காகவும் வேண்டி லீக்கி பிரபலமாக அறியப்படுகிறார்.




## புகைப்பட இதழியலில் கோயங்கா விருது

- சிஷான் ஏ லத்தீஃப், புகைப்பட இதழியல் பிரிவில் இராம்நாத் கோயங்கா விருதினைப் பெற்றார்.
- தேசியக் குடிமக்கள் பதிவேட்டில் இணைவதற்கான கடும் போராட்டம் எனும் அவரது புகைப்படக் கட்டுரைக்காக வேண்டி இந்த விருதானது அவருக்கு வழங்கப்பட்டது.
- இது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் "தி கேரவன்" என்ற இதழில் வெளியிடப் பட்டது.
- இவர், தேசிய குடிமக்கள் பதிவேட்டில் விடுபட்ட மக்களின் துயரத்தினை ஆவணப் படுத்தி, ஒரு சொல்லப்படாத மனிதரின் கதைக்கு உயிர் அளித்தார்.



## K. ஐயப்பன் பிள்ளை

- சுதந்திரப் போராட்ட வீரரும், மூத்த பா.ஜ.க தலைவருமான கேரளாவின் K. ஐயப்பன் பிள்ளை தனது 107வது வயதில் காலமானார்.
- ஐயப்பன் பிள்ளை இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று பிறகு மகாத்மா காந்தியைச் சந்தித்துள்ளார்.
- பிள்ளை ஒரு மூத்த வழக்கறிஞரும் திருவாங்கூரின் ஸ்ரீ மூலம் பிரஜா என்ற சபையின் ஒரு உறுப்பினரும் ஆவார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★